# திறன் தமிழகம்

காலாண்டு இதழ் ஏப்ரல் - ஜூன் - 2017 மலர் -1 இதழ் - 3 விலை ரூ. 20/-



மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அரசு தொழிற் பயிற்சி நிலைய சேர்க்கை ஆணை வழங்குதல்.



தொழில் நெறி வழிகாட்டி சிற்றேடுகள் வெளியீட்டு விழா.

## உள்ளே


- தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்
- பல்கலைக்கழகங்களில் போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி
- இன்ஸ்டிடியூட் ஆப் ஆக்சுவரீஸ் ஆப் இண்டியா
- விமானப்போக்குவரத்துத் துறையில் பெருகும் வேலைவாய்ப்புகள்
- அறிவோம் - GATE
- உயர்கல்வி ஒரு பார்வை
- சுயமுன்னேற்றத் தொடர்



**முதன்மை ஆசிரியர்**

**டாக்டர். என். சுப்பையன், இ.ஆ.ப**
இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
இயக்ககம், சென்னை - 32.

**ஆசிரியர்கள் குழு**

**திரு.த.விஜயகுமார்,**
இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு),

**திருமதி,ஆ.லதா**
இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு),

**திரு.தி.இராஜசேகர்,**
இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி),

**திரு.க.கதிர்வேல்,**
இணை இயக்குநர்,
(தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்),

**திரு.ப.முஸ்தபா**
திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம்,

**திரு.க.இளங்கோவன்,**
நிர்வாக அலுவலர்,
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**ஆசிரியர்,**
**திறன் தமிழகம்**
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
இயக்ககம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி,
சென்னை - 32.

தொலைபேசி எண் : 044 - 22500900,
: 044 - 20500911
தொலை நகல் எண் : 044 - 22501595


# ஆசிரியர் உரை



திறன் மிகு தமிழகத்தை உருவாக்கும் புதிய முயற்சிகளுள் ஒரு பகுதியாக இன்றைய போட்டி உலகில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் இளைஞர்களை பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்த ஏதுவாக தமிழகத்தின் 10 கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் இந்த ஆண்டு **IBPS, RRB, SSC** மற்றும் **UPSC** உள்ளிட்ட தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. இதில் பல்கலைக்கழக மாணவர்கள், தமக்கு விருப்பமான பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு அரசு பணி பெற வாழ்த்துகிறேன்.

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடையே தொழில்நெறி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதின் முக்கியத்துவம் கருதி, ஜூலை மாதத்தின் முதல் வாரமானது, தொழில்நெறி விழிப்புணர்வு வாரமாக ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்பட உள்ளது. இதனில் தொழில்நெறி விழிப்புணர்வு பேரணி, நடமாடும் தொழில்நெறி வழிகாட்டி ஊர்திகள், மாவட்ட அளவிலான தொழில்நெறி கருத்தரங்கங்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் இளைஞர்களது ஐயப்பாடுகளுக்கு நேரடியாக பதிலளித்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன. இவ்வாய்ப்புக்களை மாணவர்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டு மென்மேலும் தங்கள் கல்விப் பயணத்தில் சரியான பாதையை தேர்ந்தெடுத்து திறன் பெற்று வளம் பெற வாழ்த்துகிறேன்.

மேலும், 2016–2017ஆம் கல்வி ஆண்டில் 10வது மற்றும் 12வது முடித்த மாணவர்களுக்கு உயர்படிப்புகள், கல்வி உதவித்தொகைகள் மற்றும் பல்வேறு நுழைவுத் தேர்வுகள் குறித்த தொடர் ஆலோசனைகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 18.05.2017 முதல் 31.05.2017 வரையிலான நாட்களில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய ஆலோசனைகள் தொடர்ந்து அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் வழங்கப்பட்டுவருகிறது. இதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

சரியான விழிப்புணர்வு, தேவையான தகவல்கள், முறையான மேற்படிப்பு மற்றும் பயிற்சி, அதைத் தொடர்ந்து தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய திறன்மிகு தமிழகத்தை உருவாக்கிட தொடர்ந்து செயலாற்றுவோம். அனைவரும் பயன்பெற புதிய ஆலோசனைகளைத் தங்களிடம் இருந்து வரவேற்கிறோம்.

இத்தகைய புதிய முயற்சிகள், திறன்மிகு இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையில், பல்வேறு பயனுள்ள தகவல்களை உள்ளடக்கியதாக தங்கள் கைகளில் தவழும் இந்த இதழ் தொடர்ந்து வருங்காலங்களில் திறன் மேம்பாட்டிற்கு உற்ற துணைவனாகத் திகழுமென்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

"திறன் பெற விரும்பு"

டாக்டர். **என். சுப்பையன், இ.ஆ.ப.**
முதன்மை ஆசிரியர்

## திறன் இணையதளத்தின் பயன்பாடுகள்
## (www.tnskill.tn.gov.in)

**வேலைநாடுநர்களுக்கு (Job seekers)**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் திறன் பயிற்சிகள், மாவட்டம் தோறும் அவற்றை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் பயிற்சியில் சேருவதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி, வயது ஆகிய தகவல்களை பெற்று வேலைநாடுநர்கள் தங்களுக்கு விருப்பமான திறன் பயிற்சியை தேர்ந்தெடுத்து அப்பயிற்சியில் சேருவதற்கு இணையதளம் வாயிலாகவே விண்ணப்பிக்கலாம். பதிவு செய்யும் ஒவ்வொரு வேலைநாடுநர்களுக்கும் ஒரு பதிவு எண் வழங்கப்படும். தங்களுடைய சுயவிவரங்களில் மாற்றம் செய்யும் வசதியும் இவ்விணையதளத்தில் உள்ளது. மேலும் தனியார் நிறுவனங்கள் இவ்விணையதளத்தில் வெளியிட்டுள்ள வேலைவாய்ப்பு விவரங்களை பார்வையிட்டு இவ்வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பித்து பயன்பெறலாம்.

**திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள்**

புதிதாக திறன் பயிற்சி அளிக்க விரும்பும் நிறுவனங்கள் அதற்கான விண்ணப்பங்களை இவ்விணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். மேலும் பயிற்சி அளிப்பதற்கான உரிய அங்கீகாரம் பெற்ற பின்னர் பயிற்சிக்காக விண்ணப்பித்த பயிற்சியாளர்களின் விவரங்களை இணையதளத்திலேயே பார்வையிட்டு தகுதியான விண்ணப்பதாரர்களை தேர்வு செய்யும் வசதியுண்டு.

**வேலையளிக்கும் தனியார் நிறுவனங்கள்**

தற்போது செய்தித்தாள்களில் வெளிவரும் தனியார் துறை பணிகாலியிடங்களுக்கான அறிவிப்புகளை போன்று இவ்விணையதளத்திலும் அறிவிப்புகள் அவ்வப்பொழுது வெளியிடப்படும். குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வழியாக தகுதியுடைய பதிவுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

## இணையதளத்தின் சிறப்பு அம்சங்கள்

- பயிற்சி பெற விரும்புவோர் இணையதளத்திலேயே விண்ணப்பிக்கலாம்.
- பதிவுக்கான படிவம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பயிற்சி நிலையங்களின் விவரங்கள் மாவட்ட வாரியாக தொகுக்கப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பு மற்றும் திறன் முகாம்கள் பற்றிய தகவல்கள் அவ்வப்பொழுது வெளியிடப்படும்.
- வேலைவாய்ப்புத் துறை மற்றும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) போன்ற திறன் பயிற்சி தொடர்பான இணையதளங்களுக்கான இணைப்புகள் தரப்பட்டுள்ளன.
- இவ்விணையதளத்தை பயன்படுத்துவதற்கு எவ்வித கட்டணமும் இல்லை.

**தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் திறன் பயிற்சிகள் குறித்த தங்களது கருத்துக்களை பதிவு செய்ய 8300826352 என்ற வாட்ஸ்ஆப் (Whats app) எண்ணை தொடர்பு கொள்ளவும்.**

Starting

## முதல் தலைமுறை தொழில்முனைவோர்-1
## காம்கேர் கே.புவனேஸ்வரி ஒரு வெற்றி நாயகி

**ஐ.டி நிறுவன CEO, தொழில்நுட்ப வல்லுநர், கிரியேடிவ் டைரக்டர், எழுத்தாளர், பதிப்பாளர் என பன்முகத் திறன் கொண்ட இவர் M.Sc., Computer Science மற்றும் M.B.A பட்டங்கள் பெற்றவர். Compcare Software Private Limited என்ற சாஃப்ட்வேர் தயாரிப்பு நிறுவனத்தின் CEO & MD ஆக கடந்த 25 ஆண்டுகளாக செயல்பட்டுவருகிறார்.முதல் தலைமுறை தொழில் முனைவரான அவரிடம் ஒரு நேர்காணல்:**

**உங்களைப் பற்றி ஒரு முன்னுரை.....**

**நா**ன் பிறந்தது கும்பகோணத்தில்.அப்பா, அம்மாவின் பணிநிமித்த மாற்றல் காரணமாக, நான் வளர்ந்தது திருச்சி, தஞ்சாவூர், மாயவரம், சீர்காழி, திருவாரூர், கும்பகோணம் என பல்வேறு ஊர்களில். பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் திருச்சி ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியிலும் எம்.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரிலும் படித்தேன். அப்போதெல்லாம் படித்து முடித்தவுடன் பெண்களுக்கு இரண்டே இரண்டு வாய்ப்புகள் தான். ஒன்று டீச்சர் வேலை. அதிகபட்சமாக பள்ளி/கல்லூரி முதல்வராக இருப்பார்கள். இரண்டாவது வாய்ப்பு திருமணம்.நான் என் பெற்றோருடன் ஆலோசனை செய்து சொந்தமாக



நிறுவனம் தொடங்க வேண்டும் என முடிவு செய்தேன். 1992ல் காம்கேர் உதயமானது.

**உங்கள் நிறுவனம் உருவான விதம் பற்றி.**

கம்ப்யூட்டர் பெரும்பாலானோரின் கனவுப் பொருளாக இருந்துவந்தது. 1990களில் வங்கிகள், பள்ளிகள், மருத்துவமனைகள், பத்திரிகைகள் என அனைத்தும் தங்களுக்கென சாஃப்ட்வேர் துறையை வைத்திருக்கவில்லை. காம்கேர் மூலம் அனைத்தையும் எங்கள் வசமாக்கினோம். வங்கிகளின் கிரெடிட் கார்ட் அப்ளிகேஷன் பிராசஸிங் சாஃப்ட்வேர், பள்ளிகளின் அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டர் சாஃப்ட்வேர், மருத்துவமனை மருத்துவர்நோயாளிகள் விவரங்கள், பத்திரிகைகளுக்கான சந்தாதாரர் பட்டியல் பராமரிப்பு என பல்வேறுவிதமான சாஃப்ட்வேர்கள் தயாரித்து காம்கேர் பேனரிலேயே விற்பனை செய்யத் தொடங்கினோம். காம்கேர் சாஃப்ட்வேர் நிறுவனம் தன் தயாரிப்புகளால் பிரபலமடையத் தொடங்கியது.

**அடுத்ததாக தமிழில் தொழில்நுட்பத்தைப் புகுத்தத் தொடங்கினேன். அதற்கு ஒரு நிகழ்வு காரணமானது.**

25 வயதுமிக்க இளைஞர் ஒருவர் எங்கள் நிறுவனத்துக்கு வந்தார். ‘தமிழில் கம்ப்யூட்டர் சொல்லித்தர முடியுமா’ என்று கேட்டார்.

நான் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு ‘ஏன் தமிழில்?’ என்றேன்.

அதற்கு அவர் ‘நான் நிறைய கம்ப்யூட்டர் சென்டர்களை அணுகினேன் கம்ப்யூட்டர் கற்றுக்கொள்ள ஆனால் அவர்கள் எனக்கு ஆங்கிலம் சரியாக பேச வராததால் முதலில் ஆங்கிலம் பயிலுங்கள். ஆங்கிலம் தெரிந்தால்தான் கம்ப்யூட்டர் வரும்’ என்று சொல்லி விட்டார்கள் எனக்கு கம்ப்யூட்டர் கற்க வேண்டும். அதனால்தான்’ என்று எந்த கூச்சமும் இல்லாமல் தெளிவாகப் பேசினார்.

அவருடைய பேச்சு எனக்கு ஒரு புது யுக்தியைக் கொடுத்தது.

‘நாம் ஏன் ஒரு நபருக்கு தமிழில் சொல்லிக்கொடுக்கக் கூடாது? பலருக்குப் பயனடையும் விதத்தில் அதை ஏன் கொண்டுவரக்கூடாது?’ என்ற எண்ணத்தில் என் அடிப்படைத் திறமையான எழுத்து மற்றும் படைப்பாற்றலுடன் என் நிறுவனத்தில் சாஃப்ட்வேர் தயாரிப்பு மூலம் நான் பெறுகின்ற அனுபவங்களை புத்தகமாக தமிழில் கொண்டுவரத் தொடங்கினேன். இன்று அந்தப் புத்தகங்களின் எண்ணிக்கை 100-ஐ தாண்டியுள்ளது.

புத்தகங்கள் மட்டுமில்லாமல் தமிழையும், கம்ப்யூட்டரையும் இணைத்து சாஃப்ட்வேர்கள் தயாரிக்க ஆரம்பித்தேன். முதன்முதலில் தமிழில் சாஃப்ட்வேர் வெளியிட்டதால் அதற்கான விருதும் அங்கீகாரமும் கிடைத்தது.

என் நிறுவனம் வழியே காலையிலும் மாலையிலும் சாரை சாரையாக மாணவ மாணவிகள் பள்ளி சீருடையில் செல்லும் கண்கொள்ளாக் காட்சியால் ஒரு பிசினஸ் ஐடியா எனக்குள் உதித்தது.

அப்போதெல்லாம் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பயிற்சி மையம் என்று தனியாகக் கிடையாது. ஒவ்வொரு பள்ளியையும் தொழில்நுட்பத்துடன் ஏன் இணைக்கக் கூடாது?’ என்ற கேள்வியால் அடுத்த திட்டம் உதயமானது.

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு போட்டி தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்**

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் பயன் பெறும் வகையில் சென்னை, வேலூர், சேலம், திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, காரைக்குடி, திருநெல்வேலி, திருச்சி மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 கலை, அறிவியல் பல்கலைக்கழகங்களில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.50 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் தற்போது அமைக்கப்பட்டு UPSC, SSC, IBPS, RRB போன்ற முக்கியத்துவம் வாய்ந்த போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இதில் கலந்துகொண்டு பயனடைய விரும்பும் மாணவர்கள் தொடர்புடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி கூடுதல் விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பல முறை அமெரிக்கா சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த ப்ராஜெக்ட்டுகளில் ஈடுபடுத்திக்கொண்டதோடு, அங்கு தயாரித்த 'உயர்கல்வியில் இந்திய கல்விமுறைக்கும் அமெரிக்க கல்விமுறைக்குமான ஒப்பீடு' என்ற ஆவணப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது.

அதுமட்டும் இல்லாமல் இந்தியாவில் பல பள்ளிகளிலும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களிலும் நடைபெறும் கருத்தரங்களில் உரையாடி மாணவர் களுக்கான ஊக்கசக்தியாகவும் இருந்துவருகிறேன்.

**தொழில் முனைவில் ஆர்வமாக உள்ள இளைஞர்களுக்கு தங்களது அறிவுரை என்ன ?**

உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் திறமையை கண்டறியுங்கள். படிப்பையும் தொடருங்கள். இப்போதெல்லாம் திறமைக்கு ஏற்ற படிப்புகள் ஏராளமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. படிப்பும், திறமையும் இணையும்போது புதிதாக பிசினஸ் ஐடியா




உருவாகும். நேர்மையும், விடாமுயற்சியும், புதுப்புது யுக்திகளும் உங்கள் பிசினஸை தொய்வடையாமல் வளர்த்தெடுக்கும். இன்று ஆன்லைனில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இன்றைய இளைஞர்களின் திறமைகளை நேர்மையான முறையில் சம்பாத்யமாக்க சமூக வலைதளங்கள் உள்ளன. அவர்கள் தங்கள் திறமையை இளம் வயதிலேயே கண்டறிந்து வளர்தெடுத்துவந்தால் தாங்கள் படித்த படிப்பை திறமையோடு இணைத்து வேலைவாய்ப்பை மட்டுமில்லாது தொழில்வாய்ப்பையும் பெற முடியும்.

Ending



**த**மிழகத்தில் 85 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 483 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 27494 இடங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் 8990 அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கும் இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்த 52,904 விண்ணப்பதாரர்களுக்கான கலந்தாய்வு 23.06.2017 முதல் 07.07.2017 வரை நடைபெற்றது. இக் கலந்தாய்வில் எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுகிறது. கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இக்கலந்தாய்வு நிகழ்ச்சியினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் துவக்கி வைத்து மாணவிகளுக்கு சேர்க்கை ஆணை வழங்கினார்.

**அ**ரசாணை (நிலை) எண். 28, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 08.03.2017ன்படி 35 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் இருசக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பயிற்சி மையம் ஏற்படுத்த அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக அரக்கோணம் மற்றும் செங்கல்பட்டு, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் இருசக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

